3rd August 1966]

THE HON. SRI V. RAMAIAH : Government have approved the following routes for implementation during 1966–67 :—

(1) Tuticorin to Coimbatore;
(2) Nagapattinam to Tuticorin;
(3) Nagercoil to Kumili;
(4) Madras to Krishnagiri (via) Sunkuvarchatram;
(5) Tuticorin to Kodaikanal;
(6) Ramanathapuram to Krishnagiri;
(7) Tiruchirappalli to Kodaikanal;
(8) Madras to Neyveli (via) Pondicherry;
(9) Nagercoil to Ramanathapuram;
(10) Madurai to Coimbatore;
(11) Madras to Tiruchirappalli.
(12) Madras to Salem;
(13) Tiruchirappalli to Tuticorin;
(14) Thanjavur to Salem;
(15) Vellore to Cuddalore (via) Pondicherry; and
(16) Nagapattinam to Salem (via) Pondicherry.

திரு. நா. இராசாங்கம் : சார், சர்க்கார் எக்ஸ்ப்ரஸ் பஸ்களை எல்லா இடங்களிலும் நிறுத்தாவிட்டாலும், பல பஸ்கள் போகும் போது, ஒரு பஸ் நிறுத்திய இடத்தில் அடுத்த பஸ்ஸையும் நிறுத்த வசதி செய்யப்படுமா ?

. **கனம் திரு. வெ. ராமைய்யா :** தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், அனுமதிக்க முடிவு செய்யப் பட்டவைகளைக் குறிப்பிட்டார்கள். அவை தவிர, பரிசீலனையில் இப்பொழுது எவை இருக்கின்றன என்பதையும் கூறலாமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அந்த விவரம் என்னிடத்தில் இப்பொழுது இல்லை.

திரு. வை. சங்கரன் : இன்டர்-ஸ்டேட் பஸ் விட கேரளா, மைசூர் ராஜ்யங்களோடு நடத்தப்பட்ட பேச்சு வார்த்தைகள் எந்த அளவில் இருக்கின்றன ?

கனம் திரு. வெ. ராமைய்யா : தனிக் கேள்வி வேண்டும்.

சுற்றுப்புற துப்புரவும் சுகாதாரக் கல்வியும்

* 56 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :
திரு. வை. சங்கரன் : } கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) சுற்றுப்புற துப்புரவு, சுகாதாரக் கல்வி ஆகியவைகளை (Environmental Sanitation and Health Education) பரிசீலிக்க ஒரு கமிட்டி சர்க்காரால் அமைக்கப்பட்டதா ?

(இ) ஆமெனில், அதன் சிபாரிசுகளின் நகல் ஒன்று சபைமுன் வைக்கப்படுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) ஆம்.

(இ) உறுப்பினர்களின் தகவலுக்காக, அறிக்கையின் நகல் ஒன்று சட்டப் பேரவை நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

நஞ்சை நிலங்களில் சினிமாக் கீத்துக் கொட்டகைகள்

* 57 கேள்வி.—திரு. சி. கோதண்டராம பாகவதர் : கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) வடார்க்காடு ஜில்லாவில் 1965-66-ல் எத்தனை இடங்களில், நஞ்சை நிலங்களில் சினிமாக் கீத்து கொட்டகைகளுக்கு லைசன்ஸ் வழங்கப்பட்டது ?

(இ) நஞ்சை நிலங்களில் சினிமாக் கீத்து கொட்டகைகள் கட்டுவது உணவு உற்பத்தியை பாதிக்கும் என்பது அரசாங்கம் அறியுமா ?

(உ) நஞ்சை நிலங்களில் சினிமாக் கீத்து கொட்டகைகள் கட்டுவதற்கு அரசாங்கம் தடைவிதிக்கும் உத்தேசமுண்டா ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) Seven cases.

(b) Yes.

(c) No.

Additional Sub-Magistrate for Tiruchirappalli

* 58 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state whether the Government have proposed to appoint an additional Sub-Magistrate No. IV for Tiruchirappalli to relieve the congestion in the existing Sub-Magistrate Courts there ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : No Sir.

திரு. வை. சங்கரன் : இம்மாதிரி அங்கே ஏராளமாக வழக்குகள் குவிந்து விட்டன. ஆகவே, அங்கே இன்னொரு சப்-மாஜிஸ்ட்ரேட் வேண்டும் என்று பார் அசோசியேஷனிலிருந்தும், மற்றவர்களிடமிருந்தும் முறையீடுகள் வந்திருக்கின்றனவா ? அவற்றின் பேரில் எடுத்த முடிவு என்ன ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : சார், திரு. பி. என். சுப்பிரமணியம் என்கிற ஒரு லோகல் அட்வகேட் எழுதியனுப்பியிருக்கிறார்கள். அதை ஹைக்கோர்ட்டுக்கு ட்ரான்ஸ்பர் செய்து இருக்கிறோம். அவர்கள் பதில் எதிர்பார்க்கப் படுகிறது.